062479
22 DEC 2009

**சுருக்கம்**

திடக்கழிவு மேலாண்மை – 2006-2007 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் பெரியசேமூர் நகராட்சிக்கு உரக்கிடங்கு அமைக்க நிலம் வாங்க ஒதுக்கப்பட்ட மானியத்தொகை ரூ. 20.00 இலட்சம் வீரப்பன் சத்திரம் நகராட்சிக்கு மாற்றம் செய்த நகராட்சி நிர்வாக ஆணையரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 2) துறை**

**அரசாணை (நிலை) எண். 252** **நாள்: 21.12.2009**

**மீண்டும் படிக்க:**

(1) அரசாணை (நிலை) எண். 86, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை, நாள் 6.9.2006.

**மேலும் படிக்க**

(2) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண். 24132/07பி–4/ நாள் 25.1.2008.

----

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், 2006 - 2007 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக நிலம் வாங்க பெரிய சேமூர் மூன்றாம் நிலை நகராட்சிக்கு ரூ. 20.00 இலட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2. இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், வீரப்பன் சத்திரம் மூன்றாம் நிலை நகராட்சியில் 2001–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை 72607, தற்போது 2007 ம் ஆண்டு மக்கட் தொகை உத்தேசமாக ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ளது என்றும், இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 38 மெட்ரிக். டன் ஆகும் என்றும், இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த உரக்கிடங்கு அமைக்க வேண்டியதன் அத்தியாவசியம் கருதி ஈரோடு வட்டம் நஞ்சை தளவாய் கிராமத்தில் புதிய ரீ. சர்வே எண்.62/1, 62/2, 63/2, 63/3ஏ, 64(2) (ம) 249 ல் ஆகிய புலங்களில் 8.01 1/2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு கிரயம் செய்ய அனுமதியும் மான்யமும் வீரப்பன் சத்திரம் நகராட்சி செயல் அலுவலரால் கோரப்பட்டது என்றும், மேற்காண் இடத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சியின் பெயருக்கு பத்திரம் பதிவு செய்த பின்னர் செலவினத் தொகை எவ்வளவு என்ற விவரம் தெரிவித்த பின்னர் பிற நகராட்சிகளில் செலவிடப்படாமல் உள்ள மான்யத் தொகையினை மாற்றம் செய்யப்படும் என வீரப்பன் சத்திரம் நகராட்சி, செயல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்காண் உத்தரவின்படி வீரப்பன் சத்திரம் நகராட்சிக்கு உரங்கிடங்கு அமைக்க, ஈரோடு வட்டம் நஞ்சை தளவாய் கிராமத்தில் புதிய சர்வே எண். 62/1, 62/2, 63/2, 63/3ஏ, 64/2 ஆகிய புலங்களில் 7.72 ஏக்கர் நிலம் நகராட்சியின் பெயருக்கு 3.1.2008 இல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலத்திற்கான கிரய மதிப்பு ரூ.25,09,000/–ம், பதிவு கட்டணம் ரூ.25,190/மற்றும் முத்திரை தீர்வை 8 சதவீதம் ரூ.2,00,720/– ஆக மொத்தம் ரூ.27,34,910/–ஐ அரசு மான்யமாக வழங்குமாறு வீரப்பன் சத்திரம் நகராட்சி செயல் அலுவலர் கோரினார் என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், தனது கடிதத்தில், வீரப்பன் சத்திரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த நிலம் வாங்க வேண்டிய அவசியம் கருதியும், அரசு ஆணை (நிலை ) எண்.86, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 6.9.2006ன்படி, பகுதி II திட்டத்தின் கீழ் உரக்கிடங்கு அமைக்க நிலம் வாங்க பெரியசேமூர் நகராட்சிக்கு வழங்கப்பட்ட ரூ.20.00 இலட்சம் மான்யம் இன்னும் செலவிடப்படாமல் உள்ளதால், அத்தொகையினை வீரப்பன் சத்திரம் நகராட்சிக்கு மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டது என்றும், மேற்கான் நகராட்சி நிர்வாக ஆணையரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல் குறிப்பினை அரசு நன்கு பரிசீலனை செய்தது. பரிசீலனையின் முடிவில், வீரப்பன் சத்திரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த நிலம் வாங்க வேண்டிய அவசியத்தினை கருத்திற்கொண்டு , அரசு ஆணை (நிலை) எண். 86, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 6.9.2006 ன் படி 2006-2007 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ், உரக்கிடங்கு அமைக்க நிலம் வாங்க, பெரியசேமூர் நகராட்சிக்கு அரசால் வழங்கப்பட்ட ரூ. 20.00 இலட்சம் மானியம் செலவிடப்படாததால், அம்மானியத் தொகையினை வீரப்பன் சத்திரம் நகராட்சிக்கு மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட நகராட்சி நிர்வாக ஆணையரது செயலுக்கு பின்னேற்பு வழங்கப்படுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.47284.MAWS/ 2009/ நாள் 20/11/2009 ன் படி ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலர்**

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5.
நகராட்சி ஆணையர், வீரப்பன் சத்திரம் நகராட்சி, வீரப்பன் சத்திரம்.
நகராட்சி ஆணையர், பெரியசேமூர்.
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை, சென்னை – 9.

**-/ஆணைப்படி அனுப்பபடுகிறது/-**

21/12/09
**பிரிவு அலுவலர்**